# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஐப்பசி 12 புதன்கிழமை (29-10-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 315.

'வெற்றி உறுதி' இறுதிக்கட்ட நடவடிக்கையின் போது

## குறைந்த இழப்புக்களுடன் இலக்கை அடைவதற்கு படையினர் திட்டம்

### 2 ஆம் கட்டம் பூர்த்தி என்று நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஒக். 29

வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரை தரைப்பாதை ஒன்றைத் திறக்கும் நோக்கத்துடன் கடந்த மே மாதம் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையின் இரண்டாம் கட்டம் பூர்த்தி அடைந்துள்ளதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மூன்றாவதும் இறுதியுமான கட்டத்தின் போது குறைந்த இழப்புகளுடன் இலக்கை அடைய திட்டமிடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிலிருந்தும், நெடுங்கேணியிலிருந்தும் வந்த இரண்டு படையணிகள் கடந்த ஒகஸ்ட் மாதம் இணைந்ததும் வெற்றி உறுதி இராணுவ நடவடிக்கையின் இரண்டாவது கட்டம் ஆரம்பமானது.

மூன்றாவது கட்டத்தை மிகவும் சிறந்த முறையில் திட்டமிட்டு மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-5)

## குழப்பம் செய்த ஐ. தே. க. உறுப்பினர் மீது நடவடிக்கை

### செயற்குழுக் கூட்டத்தில் முடிவு

கொழும்பு, ஒக். 29

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் அரசின் யோசனைகளைச் சமர்ப்பித்த சமயம் கூச்சல், குழப்பத்தில் ஈடுபட்ட ஐ. தே. க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது என்று ஐ. தே. கவின் செயற்குழு முடிவு செய்துள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க)

# வரப்பிரகாஷ் மரணம் குறித்து விசாரணைக்கு உத்தரவு!

## கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் கல்வி அமைச்சர்

கொழும்பு, ஒக்ரோபர் 29

பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட முதலாம் வருட மாணவனான செல்வவிநாயக பிரகாசம் வரப்பிரகாஷின் (வயது 21) மரணம் தொடர்பாக பூரணமாக விசாரணை நடத்தி உடன் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான பேராதனைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தனவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பேராதனை பல்கலைக் கழக மாணவனான வரப்பிரகாஷ் ராகிங் சித்திரவதைக்குள்ளாகி கொழும்பில் சிகிச்சை பெற்று ஞாயிற்றுக்கிழமை இரவு மரணமானது தெரிந்ததே.

இச்சம்பவம் குறித்து அதிர்ச்சி வெளியிட்டுள்ள அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அதி உச்ச தண்டனை வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

''ராகிங்'' சட்ட விரோதமான செயலாகும். பல்கலைக் கழகம் உட்பட எந்த

(8ஆம் பக்கம் பார்க்க)

## தலைமறைவான மாணவனை தேடி பொலிஸ் வலைவீச்சு

கொழும்பு, ஒக். 29

பேராதனைப் பல்கலைக் கழக பொறியியல் பீட சிரேஷ்ட மாணவன் சதீஸ்கரனைத் தேடும் நடவடிக்கையை பொலீஸார் முடுக்கிவிட்டுள்ளனர்.

வரப்பிரகாஷின் மரணம் தொடர்பாக இவர் தேடப்பட்டு வருவது தெரிந்ததே.

சதீஸ்கரனின் பெற்றோர் தற்பொழுது கொழும்பில் தங்கி உள்ளனர்.

திருமணம் ஒன்றுக்காக யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற இவர்களையும் பொலீஸார் விசாரணை செய்தனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சென். ஜோன்ஸில் அஞ்சலிக் கூட்டம்

''ராகிங்'' கொடூரத்தால் இறந்த வரப்பிரகாஷுக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம் ஒன்று இன்று நண்பகல் 12.30 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இந்தக் கூட்டத்தில் பலர் உரை நிகழ்த்த ஏற்பாடாகி உள்ளது. (இ-3)

## மருதமுனையில் மின்மாற்றி தகர்ப்பு

மட்டக்களப்பு, ஒக். 29

மட்டக்களப்பு - கல்முனை வீதியில் உள்ள மருதமுனையில் நேற்று முன்தினம் இரவு மின்மாற்றி ஒன்று இனந்தெரியாத நபர்களினால் குண்டு வைத்துத்தகர்க்கப்பட்டது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் பொலீஸார் கைது!

கொழும்பு, ஒக். 29

முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தரான கந்தசாமி குலசிங்கம் என்பவர் வெள்ளவத்தையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தொண்டமானாறு வாசியான இவர் விடுதலைப் புலி

(8ஆம் பக்கம் பார்க்க)

## வெளிமாவட்ட தபாற் பொதிகள் வருகின்றன

யாழ்ப்பாணம், ஒக். 29

குடாநாட்டுக்கான 150 வெளிமாவட்ட தபாற்பொதிகள் இன்று காங்கேசன்துறைக்கு வந்து சேரவிருக்கின்றன.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலமாக இந்தத் தபாற் பொதிகள் எடுத்து வரப்படுகின்றன.

இங்கிருந்து 30 தபாற் பொதிகள் அனுப்பப்படவிருக்கின்றன. (இ-3)

ஓமந்தை, கட்டை அடம்பன்

## முன்னணிக் காவலரண்கள் மீது புலிகள் மோட்டார் தாக்கு

ஓமந்தை, கட்டை அடம்பன் பகுதிகளில் அமைந்துள்ள முன்னணிக் காவலரண்கள் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தினர்.

ஓமந்தைப் பகுதியில் அமைந்துள்ள காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் — படையினர் அத்தாக்குதலை முறியடித்துவிட்டதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம் — கட்டை அடம்பனுக்கும், பறையனாளங்குளத்துக்கும் இடையில் பிரிகேடியர் தலைமையில் அமைந்துள்ள படையணி அலுவலகம் மீது புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதல் சேதங்கள் தெரியவரவில்லை. (இ-3)

## தடை செய்யப்பட்ட பொருள்களை கடத்தினர்

### 2 படையினர் உட்பட மூவர் கைது

வவுனியா, ஒக். 29

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிக்கு பூவரசங்குளம் முன்னணிக் காவலரண் ஊடாக தடைசெய்யப்பட்ட பொருள்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக ஓர் இராணுவ சார்ஜன்டும், ஒரு சிப்பாயும், ஒரு பொதுமகனும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொது மகன் ஒருவர் பற்றி, மோட்டார் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றை படையினரின் உதவியுடன் கடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள மூவரும் பொலீஸாரால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். (இ-3)

## மிதி வெடிகள் மீட்பு!

வாழைச்சேனை கல்குடா வீதி பேத்தாளையில் நேற்று மாலை 7 ஜொனி மிதிவெடிகள் பொலீஸாரால் மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டன.

கால்நடை ரோந்து பொலீஸாரைத் தாக்குவதற்காக இவை புதைக்கப்பட்டிருக்கலாம் என பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## பிரான்ஸிலும் பிரிட்டனிலும் வாசு புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்தார்!

### அரசுடன் பேச்சு நடத்துமாறு கோரிக்கை

கொழும்பு, ஒக். 29

இரத்தினபுரி மாவட்ட அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார சமீபத்தில் பிரான்ஸுக்கும் பிரிட்டனுக்கும் விஜயம் செய்திருந்தசமயம் அங்கு விடுதலைப் புலிகள் பிரமுகர்களைச் சந்தித்தார்.

ஆயுதப் [illegible] கைவிட்டு [illegible] முன்வருமாறு அப்பொழுது அவர் விடுதலைப் புலிகள் பிரமுகர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

தமது வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு தற்போது இலங்கை திரும்பியுள்ள வாசுதேவ நாணயக்கார தாம் விடுதலைப் புலிகள் பிரமுகர்களைச் சந்தித்தது குறித்து தெரிவித்தார்.

''சிங்கள மக்கள் மத்தியில் இருந்த பேரினவாதப் போக்கு இப்பொழுது மறைந்து விட்டது. அரசாங்கமும் தீர்வுகாண தீர்வுயோசனைகளை முன்வைத்துள்ளது.

''சிங்கள மக்களும் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிடவேண்டும் என்றே விரும்புகிறார்கள். அவர்கள் இந்தியாவில் உள்ளது போன்ற பிராந்திய மட்டத்தில் ஆட்சி அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுவதை விரும்புகின்றனர்.

''எனவே பேச்சுவார்த்தை

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞான பீட மாணவர் தவிப்பண நிதிக்காட்சி

யாழ் பல்கலைக் கழக விஞ்ஞான பீட
மாணவர் ஒன்றியம் நடத்தும்

### ★ ஆத்ம தரிசனம் ★

[நாடகம்]

காலம்: **30-10-1997** வியாழக்கிழமை
(அரசினர் விடுமுறை நாள்)

நேரம்: பிற்பகல் **2.00** மணி, **4.00** மணி. (புதிய நேரம்)
(இரு காட்சிகள்)

இடம்: சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**அ... பளிப்பு: ரூபா 20, 50, 100**

ரிக்கட்டுக்கள் மண்டப வாயிலில்

[50854]

## கண்ணீர் அஞ்சலி

### வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை

(நுண்ணுயிரியல் நிபுணர், மருத்துவபீடம்
யாழ். பல்கலைக்கழகம்)

கடந்த பல வருடங்களாக தன்னலங்கருதாது
பல இடர்களின்மத்தியில் கொழும்பிலிருந்து வந்து
மருத்துவபீட மாணவர்களுக்கு அரும்பணியாற்றிய

**வைத்தியகலாநிதி க. வேலாயுதபிள்ளை**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியடைகின்றோம். அன்னாரின் மறைவு யாழ். பல்கலைக் கழகத்திற்குப் பேரிழப்பாகும். அன்னாரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரது இழப்பால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பீடாதிபதி, ஆசிரியர்கள்,
ஊழியர்கள்.

**யாழ். மருத்துவபீடம்,**
யாழ். பல்கலைக்கழகம்.

[சி/1914]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி விஜயா இராசபூபதி

தோற்றம்:
**1924 - 06 - 04**

மறைவு:
**1996 - 11 - 08**

நொந்தாய் சுமந்தாய் பெற்றாய்
நோய் அகல நோன்பை ஏற்றாய்
தந்தாய் அன்பைத் தந்தாய் அறிவைத்
தரணிக்கே அன்னையாகி
வெந்தே துடிக்க வைத்து - எம்மை
வேகமாய் எங்கே சென்றாய் அம்மா?
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

த. சிறீஸ்கந்தராஜா,
இல. 4, பெரேரா லேன்,
கொழும்பு - 6

[50826]

## பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 29

மொறட்டுவப் பல்கலைக் கழகத்தின் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கற்கை நெறிக்கான 96/97 ஆம் கல்வி ஆண்டுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான பிரவேச பரீட்சை அடுத்த மாதம் 22 ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சை அடுத்த மாதம் 8 ஆம் திகதி நடைபெறும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ-3)

## ஆசிரியை காயம்

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு அருகில் நேற்றுக் காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஆசிரியை ஒருவர் காயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றவரும், நல்லூரைச் சேர்ந்தவருமான பேரின்பராசா தேவராணி (வயது42) (கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியை) என்பவரே இடது கையில் முறிவு ஏற்பட்டுக் காயமடைந்தார்.

காயமடைந்தவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ)

## NEW SCIENCE ACADEMY

நல்லூர்

**1998**

புலமைப் பரிசில்
பரீட்சை வகுப்பு
(ஆண்டு - 4)

மாதாந்தப் பரீட்சையுடன்
ஆரம்பம்: **01-11-1997**
சனி 3.00 P M

(50845)

## தேவை

எமது நிலையத்தின்
மனையியற் பகுதிக்கு

**நிர்வாக
உதவியாளர்**
தேவை

**1.11.97** சனி
காலை 10 மணிக்கு
நேரில் வரவும்.

**தூரிகை**

சட்ட நாதர் வீதி,
நல்லூர்.

(50842)

## நெசவாளர் தேவை

நெசவுத் தொழிலில் அனுபவமுள்ள ஆண், பெண் நெசவாளர்தேவை. 01.11.97 சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் நண்பகல் 1.00 மணி வரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

**ஏலிம் சிறுவர்
இல்லம்,**
மெமோரியல் ஒழுங்கை,
மானிப்பாய்.

(50836)

## தேவை

நல்லொழுக்கமும்,
அனுபவமும் உள்ள
சமையற்காரர்
பிள்ளைகளை பராமரிக்க
படித்த அனுபவமுள்ள
ஆண், பெண், ஊழியர்கள்
தேவை. நேரில் உடன்
தொடர்பு கொள்ளவும்.

**ஏலிம் சிறுவர்
இல்லம்**
மெமோரியல் ஒழுங்கை,
மானிப்பாய்.

(50837)

## இருட்டில் வீடு திரும்பிய வர்த்தகரைத் தாக்கி பணம் அபகரிப்பு!

கடையைப் பூட்டி விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வர்த்தகர் ஒருவர் இடைநடுவில் மறிக்கப்பட்டு இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு அவரிடம் இருந்த பெருந்தொகைப் பணம் அபகரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு எட்டு மணியளவில் நாவாந்துறையில் இடம்பெற்றது. மேற்படி வர்த்தகர் தனது கடையைப் பூட்டி விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த சமயம் இனந்தெரியாத நபர்கள் சிலர் அவரின் முகத்துக்கு ''டோச் வெளிச்சம்'' பாய்ச்சி முகத்தில் தாக்கி அவரின் சேட் பொக்கேட்டில் இருந்த பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.

பணத்தைப் பறிகொடுத்த வர்த்தகர் பொலீசாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

(ஐ-17)

## கண்ணீர் அஞ்சலி

143/4, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த

### து. பாஸ்கரதேவன்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும், வேதனையும் அடைந்துள்ளோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வண்ணை அங்குசபாச விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

கோபால் லேன்,
யாழ்ப்பாணம்.

ச. தர்மகுலசிங்கம்

(சி/1917)

## இதய அஞ்சலி

எமது நிறுவனத்தை உருவாக்கியவர்களில் ஒருவரும், ஆளுநருமாக இருந்து அருஞ்சேவை செய்தவருமான வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை அவர்களின் மறைவையொட்டி எமது நிறுவனத்தின் சார்பில் எங்கள் ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதோடு அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்கின்றோம்.

ஆளுநர்கள், உத்தியோகஸ்தர்கள்,

**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
(T. R. R. O)**

106, 4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(சி/1915)

## மரண அறிவித்தல்கள்

### துரையப்பா பாஸ்கரதேவன்

(வெள்ளியம்பதி, அளவெட்டி)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வண்ணார் பண்ணை பிரப்பங்குளம் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா பாஸ்கரதேவன் நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா - அன்னலட்சுமி தம்பதிகளின் புதல்வனும், காலஞ்சென்ற விஜயலட்சுமியின் அன்புக் கணவரும், திருமதி வேதநாயகம் சதாசிவத்தின் (பாப்பா) சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-10-97) முற்பகல் 10-00 மணியளவில் பிரப்பங்குளம் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
திருமதி ச. வேதநாயகம்
(சகோதரி)

143/4, பிரப்பங்குளம் லேன்,
வண்ணார்பண்ணை.

(50853)

### சேதர் கந்தையா குமாரசாமி

(இளைப்பாறிய பண்டகப் பொறுப்பாளர், உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் சுதுமலையையும், நாவற்குளியையும் வசிப்பிடமாகக் கொண்டவருமான சேதர் கந்தையா குமாரசாமி நாவற்குழியில் 26-10-97 ஞாயிறு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரத்தின் அன்புக் கணவரும், கனகரத்தினம் (கண்டி), விசுவரட்ணம் (கொழும்பு), காலஞ்சென்ற திருமதி பொன்னையா ஆகியோரின் சகோதரரும், திருமதி சிவராசா ஜெயலட்சுமியின் (ஆசிரியை, TRINITY கல்லூரி, கண்டி) சிறிய தந்தையும், சிவராசாவின் (நாவற்குளி, பேராசிரியர் — பேராதனை பல்கலைக்கழகம்) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27-10-97 அன்று நாவற்குழியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வீரசிங்கம் யோகேஸ்வரன்

கேரதீவு றோட்,
நாவற்குளி,
கைதடி.

(50810)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் [illegible] நூலகம்.



# சம்பியாவில் திடீர் புரட்சி!

## ஆட்சி கவிழ்ப்பு!!

லுசாக்கா, ஒக். 29

தென் ஆபிரிக்க நாடான சம்பியாவில் திடீர் இராணுவச் சதிப்புரட்சி ஒன்றின் மூலம் ஆட்சிக் கவிழ்ப்பு இடம்பெற்றிருப்பதாக தலைநகர் லுசாக்காவில் இருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பியா அதிபர் பிரெட்டிறிக் சிலூபாவும் இராணுவம் மற்றும் பொலிஸ்துறைத் தலைவர்களும் பதவி நீக்கப்பட்டிருக்கின்றனர்.

நாட்டில் உள்ள எல்லா விமான நிலையங்களும் மூடப்பட்டிருப்பதாக சம்பியா அரசாங்க வானொலி அறிவித்துள்ளது.

எனினும் இராணுவச் சதிப்புரட்சி குறித்த செய்தியை பக்கச்சார்பற்ற அமைப்புகள் எதுவும் உடனடியாக உறுதி செய்யவில்லை.

திடீர் புரட்சியை நடத்திய இராணுவக் கப்டன் ஒருவரைக் கைது செய்து விட்டதாகவும், நாட்டின் பெரும் பகுதியை தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்து விட்டதாகவும் சம்பியா அரச இராணுவம் தெரிவித்துள்ளதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

புரட்சி தோல்வியடைந்து விட்டதாகவும் அரசு மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டிருப்பதாகவும் இராணுவத் தரப்பு அறிக்கைகள் தெரிவித்தன. ஆனால் இச் செய்தி எழுதப்படும் வரை தலைநகர் லுசாக்காவில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்ட படி இருந்தன. (ஐ)

# வெள்ளிக்கிழமை வரையும் வீரப்பனுக்கு காலக்கெடு!

சந்தன மரக்கடத்தல்காரர் வீரப்பன் எதிர்வரும் 31 ஆம் திகதிக்குள் சரணடைய வேண்டும். இல்லாவிட்டால் அவரைக் கைது செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதியும், கர்நாடக முதலமைச்சர் ஜே. எச். பட்டேலும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

வீரப்பன் கொடுத்து அனுப்பிய 'கஸட்டி'ல் தான் சரணடைவதற்கும், சிறை செல்வதற்கும் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார். வீரப்பன் சரணடைவார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஆகவே இவ் விடயத்தில் வேறுயாராவது குறுக்கிட்டுக் காரியத்தைக் கெடுத்து விடவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். வீரப்பன் இதைத் தெரிவித்துள்ளதனால் பொலீஸ் நடவடிக்கைகள் எல்லாவற்றையும் நிறுத்தியுள்ளோம் — என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

வீரப்பனும் அவரது சகாக்களும் எப்போது எங்கே சரணடைய விரும்புகின்றார்கள் என்பதை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்க வேண்டும். வீரப்பன் சரணடையும் போது இந்த நிகழ்ச்சியைப் பார்ப்பதற்கு பொது மக்களும் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

வீரப்பன் கொடுத்து அனுப்பிய கஸட்டை கருணாநிதி பத்திரிகையாளர்களுக்குப் போட்டுக் காண்பித்தார்.

இக் கஸட்டில் ஒரு கட்டத்தில் வீரப்பன் பேசுகையில் ''கருணாநிதி ஐயா! உங்களுக்கு நல்லாக வயது போய்விட்டது. அதனால் தான் நான் கேட்டது ஒன்றுக்கும் சம்மதிக்கின்றீர்கள் இல்லை'' எனக் கூறியிருக்கிறார். இதைக் கேட்ட பத்திரிகையாளர்கள் மத்தியில் பலத்த சிரிப்பொலி கிளம்பியது. (ஐ-ரி)



# சீன - அமெரிக்க உறவில் விரைவில் புதுயுகம் மலரும்

## ஹவாய்த் தீவில் அதிபர் செமின் தெரிவிப்பு

ஹவாய், ஒக். 29

சீன — அமெரிக்க உறவில் புதிய யுகம் ஒன்று மலரவிருப்பதாக சீன அதிபர் ஜியாங் செமின் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் தமது வரலாற்றுச் சிறப்பு மிக்க எட்டு நாள் விஜயத்தை ஆரம்பித்துள்ள அதிபர் செமின் முதற்கட்டமாக ஹவாய் சென்றடைந்தார். அங்கு வைத்தே அவர் இதனைத் தெரிவித்தார்.

### உலக அரங்கில்

மனித உரிமைகள், வர்த்தகம், தைவான் அணு ஆயுதப் பரவல் போன்ற பிரச்சினைகள் காரணமாக மோசமடைந்துள்ள சீன — அமெரிக்க உறவுகளைப் புதுப்பிக்க அதிபர் ஜியாங் செமினின் இந்த விஜயம் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று புதன்கிழமை வாஷிங்டனில் அதிபர் பில் கிளின்ரனை அதிபர் செமின் சந்திக்கவுள்ளார்.

இரு நாடுகளின் உறவையும் சீர் செய்யக் கடந்த ஒரு வருட காலமாக எடுக்கப்பட்டு வந்த ராஜதந்திர முயற்சிகளின் பலனாக இரு நாட்டு அதிபர்களும் கலந்து கொள்ளும் உயர்நிலை மாநாடு ஒன்று அங்கு நடைபெறவுள்ளது.

சீனாவுக்கும், ஈரானுக்கும் இடையிலான அணுவாயுத ஒத்துழைப்பை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானால் சீனாவுக்கு எதிராக விதிக்கப்பட்டிருக்கும் அணுத் தொழில்நுட்ப ஏற்றுமதித் தடையை அமெரிக்கா நீக்கிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)


## அருணாவின் மாபெரும் தீபாவளி இசை விருந்து

நீண்ட கால இடைவெளியின் பின்
**மீண்டும் யாழ். நகரில்**
அருணாவின் தீபாவளி இசைவிருந்து
காலம்: 30-10-97 வியாழக்கிழமை
(தீபாவளியன்று)
நேரம்: காலை 10.00-மாலை 2.00
இடம்: இளம் கலைஞர் மண்டபம்
சட்டநாதர்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
**பிரவேசம்: ரூபா 20.00**

விளம்பர அன்பளிப்பு:
**மதன்ஸ் ஒலியகம்,**
**கோவில் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(50838)



## துவித வற்சர பூர்த்தி நினைவு



மண்ணுலகில் அறிமுகம்:
10—06—1929

விண்ணுலகில் சங்கமம்:
29—10—1995

**ஸ்ரீமான் ஷண்முகரத்நம் குமரேசன்**
(முன்னாள் விரிவுரையாளர், கோப்பாய் அரசினர் ஆசிரியகலாசாலை)

பூமேவு பூந்தமிழின் புகழும் சேர
புகழீழச் சான்றோனாய்ப் புலமைகொண்டு
நாமேவ நானிலத்தில் கலைநவின்ற
நாவலனாம் குமரேசன் நல்லறிஞன்
பாவோடும் பணிவோடும் பாரில் வாழ்ந்து
பரவசமாய்ப் பரமசிவன் பதமும் சேர்ந்தான்
நாவாலே நவின்றிட்டோம் நினைவு நாளில்
நாயகனிற் கஞ்சலியைத் தந்து நின்றோம்!

நன்றி!

ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள்.

மணியகாரன் ஒழுங்கை.
கொக்குவில் கிழக்கு.
கொக்குவில்.

(50843)



## கண்ணீர் அஞ்சலி

வரப்பிரகாஷமே!

| | | | |
|---|---|---|---|
| உன்னை | நினைந்து | உருக்கும் | கண்ணீர் |
| எண்ண | அஞ்சலிப் | பூக்கள் | சமர்ப்பணம்! |
| வண்ண | வாழ்வை | வதைத்த | ஈனரை |
| ஒதுக்கி, | ஆன்ம | சாந்தியில் | வாழ்கவே |
| எம்முளும் | ''அசுரர்'' | இன்னும் | பலருளர்! |
| ''தம்மில்'' | இருக்கிறார்; | தக்க | தருணம் |
| செம்மையாய் | இவர்களைத் | திருத்திடா | விட்டால் |
| அம்ம! | அதுபெரும் | அழிவாய் | முடியும்!! |

ஆசிரிய வட்டம்,
யாழ். மத்திய கல்லூரி.

(50846)



## கண்ணீர் அஞ்சலி

**வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை**
(இடை வரவு விரிவுரையாளர், நுண்ணுயிரியல் துறை, யாழ். மருத்துவபீடம்)

எமது சமூகத்தில் கல்வித் துறையிலும், பொதுத் துறைச் சேவையில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திலும் நேர்மையோடும் உண்மையோடும் செயற்பட்ட மதிப்பிற்குரியவரின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரும் அதிர்ச்சியும் அடைந்தேன். அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நானும் பங்குகொள்கின்றேன்.

வி. பி. சிவநாதன்,
செயலாளர்,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.

(சி/1916)



## யா/இமையாணன் அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலயம்
## பரிசளிப்பு விழா - 1997

காலம்: **1997 - 10 - 29 புதன்கிழமை**
மு. ப. 9-30 மணி (இலங்கை நேரம்)
இடம்: **வித்தியாலய அரங்கு**
தலைவர்: **திருமதி ந. சந்திரசேகரம்** (அதிபர்)
பிரதம விருந்தினர்: திரு. சி. சிவராஜா
(கலவிப்பணிப்பாளர் யாழ். வலயம் II)
சிறப்பு விருந்தினர்; திரு வை. செல்வராஜா
(பிரதிக்கல்விப்பணிப்பாளர், கரவெட்டிக் கோட்டம்)
பரிசில் வழங்குதல்: திருமதி ஸ்ரீ. சிவராஜா
மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.
★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பாடசாலை பழைய மாணவர் சங்கம்.

யா/இமையாணன் அ.த.க.வி.,
வல்வெட்டித்துறை.

[50847]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலிகள்

''ராகிங்'' கொடுமையினால் உயிர்நீத்த

## 'வரப்பிரகாஷ்'

பண்பினால் அன்பினால்
பாசத்தால் நேசத்தால் – பரி.யோவான்
தனை நிறைத்த பாங்கா! எமை விட்டு
எப்படித்தான் நீ இன்று சென்றிட்டாய்?

உனக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

**தமிழ் மன்றம்**
**யாழ். பரி.யோவான் கல்லூரி.**

(சி-1907)

# இதய அஞ்சலிகள்

பரி. யோவான் மைந்தனே!

## செல்வவினாயகபிரகாசம் வரப்பிரகாஷ்

தங்கமாய் அண்ணனே நீ கல்வியில் ஜொலித்திட உனக்கு
பங்கமாய் வந்து எங்களின் மைந்தரே
உந்தனின் உயிரினை உறிஞ்சினர் ஐயகோ!

எமது கழக முன்னாள் செயலாளரான
வரப்பிரகாஷ் அவர்களுக்கு எமது
இதய அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன்
பகிடி வதையையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்!

**லியோ கழகம்.**
**யாழ். பரி.யோவான் கல்லூரி.**

(சி/1908)

# காதடைக்கும் செய்தி ஒன்று காற்றோடு வந்ததடா!



தாயின் மடியில்: 22 – 06 – 1976

வெறியர் பிடியில்: 26 – 10 – 1997

## செல்வவினாயகபிரகாசம் வரப்பிரகாஷ்

(பரி. யோவான் கல்லூரி பழைய மாணவன்
1995 ஆம் ஆண்டு கணிதப்பிரிவு)

காலை பத்திரிகை கண் விழித்து நாம் படிக்க
கண்கள் நம்பாத கட்டச் செய்தி ஒன்று
என்ன உன் உறுதி வடிவழகு வண்ண முகம்
பதிலின்றி நீசெல்ல பாவம் என்ன நாம் செய்தோம்?
எம் தமிழர் இனம் ஒழிக்க எல்லையில்லா வழிமுறைகள்
பொழுதோடு கணக்கொழிக்க புது முறை தான் கண்டனரோ?

காவியம் படைக்கக் கனவு கண்ட நம் தோழா
உன் கனவழித்து காலனுக்குப் பரிசளித்த
கழிசடைகள் கற்றது முன்னணி தேசியக் கல்லூரி
பெற்றோர் உற்றோர் யாவரும் பெரிய இடத்திலுள்ளோர்
வெட்கித் தலை குனிவர் வேறென்ன அவர் செய்ய?
சட்டத்தின் பிடியிலும் இச்சமுதாயச் சாக்கடைகள்
சிக்காமல் வெளிவந்தால் சீரழியும் இவ்வுலகம்
பொறியியல் பீடத்தின் இவ் வெறியாட்டத்திற்கு
பொழுதோடு பழுதான இளங் குருத்தே
உன் உயிர் துடிக்கையில் ஒரு கணம் நினைத்திருப்பாய்!
என்னுடன் மட்டும் இவர் வெறி அடங்குமா?
என்னுயிர் மட்டும் இவர் பசிக்காகுமா?
இல்லையடா பகிடி வதை அவர் பண்பாடு
உடல் வருத்தி உளம் உடைத்தும்
உப்புச் சுவைக்காய் உன் உதிரம் கேட்டவர்கள்
நம்பு நாய்க்கு நடுக்கடலிலும் நக்குத்தண்ணிதான்
பெற்றோர் பெருங்குரல் இனி எட்டுமா உன் செவிக்கு
கற்ற கல்லூரி ஒரு கண் இழந்து தவிக்குதடா
உற்ற நண்பரெல்லாம் உன் பிரிவில் வாயடைக்க
ஆற்றாத் துயருக்கு ஆறுதல் கூற யாருள்ளார்?

உன் பிரிவை ஏற்கமுடியாது தவிக்கும்
நண்பர்கள்
**பரி.யோவான் கல்லூரி**

(50820)

# மருந்து திருட்டு

செம்பியன்பற்று, ஒக் 29

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள நாகர்கோயில் ஆயுள் வேத வைத்தியசாலை கடந்த 19 ஆம் திகதி இரவு உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த மருந்து வகைகள் திருடப்பட்டிருப்பதாக பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ். செவ்வந்திநாதர் தெரிவித்தார். (ஐ–36)

# கட்டாக் காலிகள் தொல்லை

யாழ்ப்பாணம், ஒக் 29

யாழ். மத்திய விவசாய சம்மேளனப் பகுதியில் கட்டாக் காலி ஆடு மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இது தொடர்பாக விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் அப் பகுதி கிராம சேவையாளரிடம் முறையிட்டுள்ளனர்.

இதனையடுத்து கால் நடைகளைக்கட்டிவளர்க்குமாறும், இதை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கிராம சேவையாளர் எஸ்.ரி. சகுந்தலாதேவி தெரிவித்துள்ளார். (ஐ)

# தேவை

அனுபவமுள்ள ஆங்கிலத் தட்டெழுத்தாளர் (Typist) மொழிபெயர்ப்புச் செய்யக் கூடியவர் தேவை. வயதெல்லை 45—க்கு மேல்

தொடர்பு:-
மருதம் என்றபிறைஃஸ்
66, மணிக்கூட்டு வீதி,
(ஆஸ்பத்திரி முன்பாக)
யாழ்ப்பாணம்.

(50792)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## வெளிவாரிப் பரீட்சை

## பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி II 1995

**13 - 10 - 97** (திங்கள்) அன்று வவுனியாவில் இடம்பெற்ற ஹர்த்தால் காரணமாக அன்றைய தினம் நடைபெறவிருந்த வெளிவாரிப் பரீட்சைகள் நடைபெறவில்லை. இதனால் யாழ். பல்கலைக்கழகத்தில் அன்றைய தினம் நடைபெற்ற வெளிவாரிப் பரீட்சை இரத்துச் செய்யப்படுகின்றது. இந்தப் பாடங்களுக்கான பரீட்சை **18 - 11 - 97** அன்று பின்வரும் நேர அட்டவணைப் படி நடைபெறவுள்ளது.

EX ENG 3.1 –
9-30a.m. -12-30p.m.
EX PHYG 3.1 –
1-30 p.m. - 4-30 p.m.

பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள், தமது புதிய அனுமதி அட்டைகளை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்.

(சி/1899)

# பண்புநிறைபழையமாணவன்

## செல்வவினாயகபிரகாசம் வரப்பிரகாஷ்

பார் எல்லாம் போற்றும் பரி. யோவான்
பண்பான சிற்பங்களை நிதம் செதுக்கும்.
பாலர் வகுப்பு முதல் உயர் கல்வி வரை
படிப்புடன், பண்புகளையும் புடமிட்டு வளர்க்கும்
பண்பான மானிடத்தின் வாரிசாக வந்தவனே!
- வரப்பிரகாஷ்

பண்பற்ற செய்கையினால் பதறுகின்றோம்.
பசியாற நீ மட்டும் போதுமா!
படித்தவர்கள் வாழுகின்ற சமூகம் விழிக்குமா?

பழைய மாணவர் சங்கம்,
**யா/ பரி. யோவான் கல்லூரி.**

(சி/1912)

# OUR CONDELENCE

## S. VARAPRAGASH

An outstanding Old Boy –
**St. John's College, Jaffna.**
&
Undergraduate – **Engineering Faculty.**
University of Peradeniya.

Died in Colombo - 26 th October, 1997

You have fallen easy prey to so called - inhuman behaviour
May the torch of excellence you lit endure forever.

**English Union**
**St. John's College, Jaffna.**

[C/1905]

# கண்ணீர் முத்துக்கள்

## வரப்பிரகாஷே!

மொட்டவிழ்ந்து நீ மணம் பரப்புகையில்
கொட்டு குளவியாய் குத்தியோர் செயலினால்
செத்து மடிந்த எங்களின் சோதரா!
கற்ற கொலைஞரின் சாதனைப் பட்டியல்
உன்னுடன் முடியுமா?

வரப்பிரகாஷ் அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன் ''ராகிங்''கையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இன்ரறக்ட் கழகம்,
**யாழ். பரி.யோவான் கல்லூரி.**

(சி/1906)

# கண்ணீரால் ஒரு காவியம்

## அழிந்து விட்ட ஆற்றலொன்று

அருள் பொழியும் இருவிழிகள் அறிவுறுத்தும் ஆற்றலதை
பொருள் பொதிந்த உன் வார்த்தை பொய்க்குமா ஒரு காலம்?
பணிவாளர் உனை நினைத்து பனிக்கும் எம் கண்களெல்லாம்
நிறைவான மனிதன் நீ நீசர் உனை அழித்தாரோ?
விஞ்ஞான கழகத்தின் விதிவகுத்த தலைவனாய் நீ..!
விஞ்சி நிற்கும் சேவை செய்து LEO வின் செயலராய் நீ..!
அஞ்சி நின்றறியாத மாணவ, அன்பான தலைவனாய் நீ
வாழ்ந்துகாட்டிச் சென்றாய் நீ வாயடைத்து நாம் நிற்க!

கள்ளமிலா உன்னை காவு விட்ட கயவரவர்
பகிடிவதை உன்னை பலியெடுத்த பருவமிது
விடியுமா இனி? பகிடிக்கும் வதை அற்ற பக்குவம் வந்திடுமா?
உத்தமன் உன் உயிர்க்கு உரியவிலை கிடைத்திடுமா?
பால் கொடுத்த தாய்வயிறு பற்றி எரியாதோ?
பெயர் கொடுத்த தந்தையின் பெருமாலம் ஓயாதோ?
உனை இழந்த சமுதாயம் களை இழந்து போகாதா?
உற்ற நண்பரவர் உயிர் துடித்துருகாதா
எமது கழக முன்னாள் தலைவர் வரப்பிரகாஷ்
அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்...!

**விஞ்ஞானக் கழகம்,**
**யாழ். பரி. யோவான் கல்லூரி.**

(சி/1909)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் கல்வி அபிவிருத்திக்காக மூலவள நிலையம் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஒக். 29

குடாநாட்டில் பாலர்கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் மூலவள நிலையம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

பாலர் கல்வி முக்கியமாகப் போதிக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் பாலர் கல்வி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்தல், மாதிரிப் பாடசாலைகளை சகல இடங்களிலும் அமைத்தல் ஆகிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தவே இந்த மூலவள நிலையம் அமைக்கப்படவிருக்கிறது.

இரண்டு வயதுக்கும் 5 வயதுக்கும் இடைப்பட்ட — வறுமையால் கல்வி பெற முடியாத — நிலையில் உள்ளவர்களின் கல்வி நிலையை முன்னேற்றவே இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாலர்களுக்கு போஷாக்கு நிறைந்த உணவுகளை வழங்கவும், விளையாட்டுக்களில் நாட்டம் கொள்ளச் செய்யவும் இத்திட்டத்தில் செயற்பாடுகள் வகுக்கப்பட்டுள்ளன.

பேராசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்வித்துறையில் நிபுணத்தும் பெற்றவர்கள் ஆகியோரின் ஆலோசனை பெற்று செயற்படுத்தப்படவிருக்கும் இத்திட்டம் குறித்து விரைவில் யாழ். அரச அதிபர் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெறவிருப்பதாக இத்திட்டத்தை முன் எடுக்கும் யாழ். அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையத் தலைவர் எஸ். பரமநாதன் தெரிவித்தார். (ஐ-3)

---


## பொய்யாமொழி ஜோதிடம்

எத்தகைய தீராத பிரச்சினைகளும் தீர ஆலோசனை வழங்கப்படும். வியாபார விருத்தியந்திரம், செவ்வாய் தோஷத்தால் பிரிந்தவர் ஒன்று சேரயந்திரம் வழங்கப்படும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம்.

செவ்வாய், சனி ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயிலடி, யாழ்ப்பாணம். ஏனைய நாள்களில் காலை 10 மணிக்கு முன்பும், பிற்பகல் 2 மணிக்குப் பின்பும் மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடத்திலும் சந்திக்கலாம்.

ஸ்ரீலஸ்ரீ சு. சிவஷண்முகானந்தக் குருக்கள்.
(50807)



## வெள்ளி விழா
## சிறப்புற வாழ்த்துகின்றேன்

13-11-1997 வியாழக்கிழமை நடைபெறும் அகில இலங்கைச் சைவக் குருமார் அர்ச்சகர் சபையின் வெள்ளி விழாவின் போது சமய அறிவுப் போட்டி, ஸ்தாபகர்களைக் கௌரவித்தல், சமயக் கண்காட்சி என்பன சிறப்பாக நடைபெற திருகோணமலை, சாம்பல்தீவு மாங்கணாய் மஹாமாரி அம்பாளின் பாதார கமலங்களை வணங்கி ஆசீர்வதிக்கின்றேன்.

சிவஸ்ரீ இ. இரத்தினேஸ்வரக் குருக்கள்
பிரதம குரு
மாங்கணாய் மஹாமாரி அம்பாள் ஆலயம்,
சாம்பல்தீவு, திருமலை.

(சி/1890)



## ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.
## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
## விசேட பொதுக்கூட்டம்

பாடசாலைக் கட்டடப் புனர்நிர்மாணத்துக்கான நிதி சேகரிப்பது தொடர்பாக மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் கல்லூரி மண்டபத்தில் எதிர்வரும் 01-11-1997 சனிக்கிழமை மு.ப. 10.30 (புதிய நேரம்) மணியளவில் இடம்பெறும்.

பெற்றோர், பழையமாணவர்கள், நலன்விரும்பிகள் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர். - செயலாளர்

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
(சி/1894)



## கூட்டுறவுக் கணக்காய்வு சேவை
## பயிலுநர் தேவை

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் ஆரம்பிக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வு சேவையில் பயிற்சி பெற விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவத்தை ரூபா 5 செலுத்தி சபையில் பெற்று 05-11-97- க்கு முன்னதாக ''மாவட்டச் செயலாளர்'' இல. 14, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும். பயிலுநர் கணக்காய்வு சேவை செய்யும் போது அவர்களுக்கு படி வழங்கப்படும்.

தகைமை: க. பொ. த. உயர்தரம் வர்த்தகப் பிரிவில் 04 பாடம் சித்தியடைந்தவர்கள் (கணக்கியல், வர்த்தகம் உட்பட)
அல்லது
கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர்பிரிவு சித்தியடைந்தவர்கள்.

வயதெல்லை: 21—40

தெரிவு செய்யப்படும் பயிலுநர் மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் பயிலுனர் கணக்காய்வு சேவையில் ஈடுபடத் தயாராக இருத்தல் வேண்டும்.

மாவட்டச் செயலாளர்,
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை.
இல. 14, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம்.
[சி/18[illegible]]


---

## செய்திச் சாரம்

### வயிற்றோட்டம் பரவுகிறது

செம்பியன்பற்று, ஒக். 29

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கிராம வைத்திய சாலைக்கு சிகிச்சை பெற வரும் நோயாளிகளில் 80 வீதமானோருக்கு வயிற்றோட்டம் உள்ளதாகவும் இந்நோய் இப்பகுதியில் தீவிரமாகப் பரவுவதாகவும் மருதங்கேணி வைத்திய சாலை பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஐ-36)

### தபாற்பெட்டி இல்லை

செம்பியன்பற்று, ஒக். 29

வடமராட்சி கிழக்கு மாமுனைப் பகுதியில் நீண்டகாலமாகத் தபாற்பெட்டி இல்லை.

இதனால் இப்பகுதி மக்கள் தமது கடிதங்களை தபாலில் சேர்ப்பதற்காக ஒரு மைல் தூரம் நடந்து செம்பியன் பற்று உபதபாலகத்திற்குச் செல்ல வேண்டி உள்ளது. (ஐ-36)

### கலைஞர் விவரம் சேகரிப்பு

செம்பியன்பற்று, ஒக். 29

மருதங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் கலைஞர்கள் சமூகத் தொண்டர்களை கௌரவிக்கும் நோக்குடன் கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் கலைஞர்களினதும் சமூகத் தொண்டர்களினதும் விவரங்களை கிராம அலுவலர்கள் திரட்டி வருகின்றனர். (ஐ-36)

### 6 ஆயிரம் பனம் விதைகள்

செம்பியன்பற்று, ஒக். 29

மருதங்கேணி கல்விக்கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் தினத்தன்று 6 ஆயிரம் பனம் விதைகள் நடப்பட்டதாக மருதங்கேணி பிரதிக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ-36)

### நாடக நூலுக்கு விருது

நெடுந்தீவு, ஒக். 29

1994 ஆம் ஆண்டிற்கான சிறந்த நாடக நூலாக ஆ. செகராசசிங்கம் எழுதிய 'இம்மனுவேல் நாட்டுக்கூத்து' இலங்கை இலக்கியப் பேரவையின் விருதுக்குத் தெரிவு [illegible] (ஐ-103)

---

யாழ். ஆஸ்பத்திரி

# தொலைபேசிச் சேவை மீண்டும் சீர் செய்யப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ். போதனா வைத்திய சாலைஉள்ளகத்தொலைபேசிகள் வெளிமாவட்டத்தில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளக்கூடியதாக செயற்பட ஆரம்பித்துள்ளன.

முன்பு இவ்வாறு தொடர்பு கொள்ளக்கூடியதாக செயல்பட்டு வந்த இப்பரிவர்த்தனை நிலையம், அங்கே செயல்பட்டு வந்த 'சுவிச் போர்ட்' பழுதடைந்து திருத்த முடியாத நிலையில் இருந்தமையினால் இடைக்காலத்தில் இச்சேவை செயலிழந்து உள்ளக தொலைபேசி தொடர்பு மாத்திரமே நடைபெற்று வந்தது.

தற்போது அங்கு கடமையில் இருக்கும் தொலைபேசித் தொழில்நுட்பவியலாளரின் முயற்சியினால் தற்காலிக 'சுவிச் போர்ட்' அமைக்கப்பட்டு மீண்டும் வெளிமாவட்ட, வெளிநாட்டுத் தொடர்புச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன:

நிரந்தரமாக இயங்கி வந்த பழுதடைந்த 'சுவிச் போர்ட்'டைத் திருத்துவதற்கான மேலதிக நடவடிக்கைகளையும் இத்தொழில் நுட்பவியலாளர் மேற்கொண்டுள்ளனர்.

திருத்தி அமைப்பதற்குத் தேவையான உதிரிப்பாகங்களை கொழும்பில் இருந்து பெறுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உதிரிப்பாகங்கள் வந்து சேர்ந்ததும் திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கிவந்த 96 உள்ளக தொலைபேசிகளில் தற்போது 42 உள்ளக தொலைபேசிகளே இயங்குகின்றன. மிகுதி 54 உள்ளக தொலைபேசிகளும் உதிரிப்பாகங்கள் இன்றி இயங்க முடியாத நிலையில் இருக்கின்றன.

இவற்றையும் முழுமையாக இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-15)

# பாடசாலை மாணவர்களுக்காக மீண்டும் 2 பஸ்கள் சேவையில்

அச்சுவேலி, ஒக். 29

அச்சுவேலியில் இருந்து மீண்டும் இரண்டு பஸ்கள் பாடசாலை மாணவர்களுக்கான சேவையில் ஈடுபடுகின்றன.

போக்குவரத்துச் சபையின் இரண்டு பஸ்கள் வருடத் தொடக்கத்தில் அச்சுவேலி – யாழ்ப்பாணம் பாடசாலைச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தன.

இடைக்காலத்தில் இச்சேவை நிறுத்தப்பட்டு நீர்வேலியில் இருந்து ஒருபஸ்ஸும் அச்சுவேலியில் இருந்து ஒரு பஸ்ஸும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன.

இதனால் மாணவர்களுக்கு ஏற்பட்டு வந்த வசதியீனங்கள் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து இம்மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் இரண்டு பஸ்களும் அச்சுவேலியில் இருந்தே பாடசாலைகளுக்குச் சேவையை மேற்கொள்கின்றன.

ஒரு பஸ்ஸில் மாணவிகளும் மற்றைய பஸ்ஸில் மாணவர்களும் தனித்தனியாகச் செல்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன [இ-11]

அச்சுவேலிப் பகுதியில்

# படிகளுக்குப் பதிலாக கல், கடதாசிச் சரை

அச்சுவேலி, ஒக் 29

அச்சுவேலிப் பகுதியில் நிறுத்தலளவைப் படிகளாக பல்வேறு பொருள்கள் பயன்படுத்தப்படுவதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி பொதுச் சந்தை மற்றும் வியாபார நிலையங்களில் நிறுத்தல் அளவையில் கல், தேயிலைப்பைக்கெட், கடதாசிச் சரை, சைக்கிள் அச்சு, இரும்பு ஆணி, சாதாரண இரும்புத் துண்டங்கள் என்பன படிகளாகப் பயன்படுத்தப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அத்துடன் நீண்ட காலமாக சீல் பண்ணப்படாத தராசுகளும் படிகளுமே பயன்படுத்தப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-11)

தொழில்நுட்பவியலாளர் சேவை:

# வினைத்திறமைகாண் பரீட்சை; வயதுச் சலுகை நீக்கப்பட்டது

திருநெல்வேலி, ஒக். 29

ஸ்ரீலங்கா தொழில் நுட்பவியலாளர் சேவையைச் சேர்ந்த அரச உத்தியோகத்தர்களுக்கு 45 வயது கடந்திருக்கும் பட்சத்தில் அவர்கள் வினைத்திறமை காண் தடை பரீட்சையிலிருந்து விதிவிலக்குப் பெறலாம் என்று கடந்த அரசாங்க காலத்தில் வெளியான பொது நிர்வாக அமைச்சின் 27/94 இலக்க சுற்றறிக்கை ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான புதிய சுற்றறிக்கை கொழும்பில் உள்ள பொது நிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ். சுகாதாரத் திணைக்களத்துக்கும் இந்தச் சுற்றறிக்கை கடந்த வாரம் கிடைத்தது.

இதன் பிரகாரம் வினைத்திறமை காண் தடை பரீட்சையில் மேற்படி தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் சித்தியடையாதவிடத்து அவர்களுக்கு அடுத்த 1998 ஆம் ஆண்டுக்கான வருடாந்த சம்பள உயர்வு வழங்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-135)

## கைதடியில் இன்று

கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலய பரிசில் நாள் விழா இன்று புதன்கிழமை வித்தியாலய மண்டபத்தில் அதிபர் எம். பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும்.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ். கல்வி வலயம் 1 இன் பணிப்பாளர் சு. இரத்தினராசாவும், சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிக் கோட்டக்கல்வி அலுவலர் இ. கணேசனும், கௌரவ விருந்தினர்களாகக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் இ. கைலைநாதன் நா. சத்தியநாதன் ஆகியோரும் கலந்து கொள்வர். (இ-117)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சாவகச்சேரி நகரில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் வீட்டுடனும் நல்ல தண்ணீர்க்கிணற்றுடனும் சேர்ந்த பிரயோசனங்கள் உள்ள 11 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்குண்டு. முழுமையாகவோ, அன்றி பகுதி பகுதியாகவோ வாங்கலாம். தொடர்பு: இராஜேஸ்வரி, இல: 21, கோட்டடி, சாவகச்சேரி. [சி/1896]

### தவறிவிட்டது

சிவசுப்பிரமணியம் நாகராஜா என்பவரது 530653013× இலக்க தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கல்வியங்காடு ஆறுமுகவேலன், யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். [50802]

ஆரோக்கியம் யேசுதாசன் என்பவரது 701490681V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை 0906010483 இலக்கமுடைய விசேட அடையாள அட்டை மற்றும் சிறு தொகைப் பணத்துடன் அரியாலைக்கும் நாவற்குழிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். ''சுன்னாகம் டயமன்ட் ஸ்ரோர்ஸ்'' சுன்னாகம். [50825]

### பிறீமாகோழிக்குஞ்சு

ஒருமாதம் நிரம்பிய கைலையின் சிவப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சும், 12 நாள் நிரம்பிய கைலையின் சிவப்புக் குஞ்சும் விற்பனைக்கு உண்டு. கண்ணா வீடியோ சென்ரர், மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். [50815]

06-11-97 அன்று ஒருநாள் புறோயிலர் குஞ்சும், கைலையின் சிவப்பு, வெள்ளை பேட்டுக்குஞ்சும் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். கண்ணா வீடியோ சென்ரர், மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். [50814]

## கல்விச் சீர்திருத்தம் பற்றிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 29

உத்தேசக் கல்விச் சீர்திருத்தங்கள் பற்றிய கருத்தரங்கு ஒன்று இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளது.

பேராசிரியர் வ. ஆறுமுகம் தலைமையில் நடைபெற உள்ள இக்கருத்தரங்கில், பல்கலைக்கழகக் கல்வி பற்றி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் —

ஜி.சீ.ஈ. உயர்தரக் கல்வி பற்றி பேராசிரியர் வ.க. கணேசலிங்கமும் —

முன்பள்ளிக் கல்வி பற்றி கலாநிதி சபா. ஜெயராசாவும் —

கனிஷ்ட இடைநிலையும் ஜி.சீ.ஈ. சாதாரண தரமும் பற்றி கே. நடராசாவும் —

ஆங்கிலம், கணனி தொழில் வழிகாட்டலும், ஆலோசனையும் பற்றி அருட்தந்தை அ.இ. பேர்னாட்டும் —

ஆசிரியர் பயிற்சி பற்றி சோ. பத்மநாதனும் —

ஆரம்பக் கல்வி பற்றி தா. அமிர்தலிங்கமும் —

பாடசாலை அமைப்பும் முகாமைத்துவமும் பற்றி அ. பஞ்சலிங்கமும் — கருத்துரை வழங்க உள்ளனர். (இ-90)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி அறிவழகி ஸ்ரீஸ்கந்தராசா
அவர்களின் அன்புத் தந்தையாகிய
**திரு. கந்தர் பஞ்சாட்சரம்**

அவர்களின் மறைவையொட்டி, துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
அலுவலக ஊழியர்கள்,
மாணவர்கள்,

(50819) **யா/ இந்து மகளிர் கல்லூரி**

## 'பகிடிவதை' யாகத்துக்கு - நீயா 'பலிக்கடா' ஆக வேண்டும்?



பண்பிலே அன்பையுஞ் சேர்த்து
பரி. யோவான் புகழ் வித்தகனாகி,
நண்பனாய், நம்தலைவனாய் பிரகாசித்தாய் – எங்கள்
வரப்பிரகாஷே! – நீயும்
பெற்றவரும், சுற்றத்தவரும் பற்றுமிக்க பாங்கரையும் - விட்டு
ஏனோ போய் விட்டாய்? விளம்பிடத்தான் மாட்டாயோ?
பாடுபட்டு நீ படித்தாய் - பல்க (கொ) லைக்கழகம் புகுந்திடவா?
கேடுபட்ட காட்டேரிக் கூட்ட முனைக் குதறிடவா?
''பகிடிவதை'' என்ற பெயரில், பட்டம் பெறப் போனவுன்னை
திட்டமிட்டா சிதைத்தார்கள்?
நண்பா! பகிடிவதைக்கின்று நீ பலிக்கடா ஆகிவிட்டாய்!
இனியும்'
திருந்தித் தான் யாது பயன்? என்றாலும் .........!

பழைய ஒரு மாணவ தலைவனை
இழந்து நிற்கும்
மாணவ தலைவர்கள்,
**யாழ். பரி. யோவான் கல்லூரி.**

(சி/1910)

## கண்ணீர்க் காணிக்கைகள்

### வரப்பிரகாஷே!

பிரகாசம் தந்த - எங்கள்
வரப்பிரகாஷப் பயிரே!
பகிடிவதைப் பூச்சிக்கா
பலியாகிப் போனாய்!
உனக்கு எமது
கண்ணீர் அஞ்சலிகள்!!

இந்துமன்றம்
**யாழ். பரி. யோவான் கல்லூரி**
(சி/1904)

## எமது கண்ணீர் அஞ்சலி

இது போன்ற செயல்களால், எமது சமூகம் சீரழியாதிருக்க வளருந் தலைமுறையினராகிய மாணவச் செல்வங்கள் ஒன்றுபட்டுழைக்க இன்றே உறுதி பூணுவோம்!


உன்பிரிவால் துயருறும்
தாய், தந்தை, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்களின்
துன்பத்தில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

**யாழ். பரி. யோவான் கல்லூரி ஆசிரியமன்றம்**
(சி/1911)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 19 – 12 – 1980



மறைவு: 29 – 10 – 1997

### செல்வன் நவரத்தினம் கலைச்செல்வன்

மரணபரியந்தம் நீ உண்மையாயிரு
நான் உனக்கு ஜீவகிரீடத்தை தருவேன்.
(வெளி 1:10)

உமது பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அண்ணா, தம்பிமார்,
தங்கை, உறவினர்கள்.

இல. 28/5, தொண்டலடி லேன்,
நல்லூர். (50758)

## 10-ம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்: 31 – 08 – 1957



மறைவு: 21 – 10 – 1987

அமரர்
### சுப்பிரமணியக் குருக்கள் ரவிநாதன்

திதி: 30 – 10 – 1997


உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றென்றும் நீங்காத நினைவுடன்
குடும்பத்தினர்,

அரியாலை. (50812)

## 31 ஆம் நாள் நினைவு

மண்ணில் வாழ: 13 – 01 – 1955



விண்ணில் வாழ: 30 – 09 – 1997

### அமரர் ஜேக்கப் எட்வேட்

வெளிநாடு சென்றிருந்தீர்
வேளையுடன் திரும்பவில்லை
வருவேன் வருவேன் என்று கடிதம் கூற
வந்ததுவோ துயரச் செய்தி
உள்ளம் பதறுதையா
குடும்பம் உயர்ந்திடவே
தியாகங்கள் பல புரிந்த
மெழுகுவர்த்தி நீர் ஐயா
நேசித்தோம் அன்புடனே
நினைத்திருப்போம் என்றும் உம்மை.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக யாழ். மரியன்னை பேராலயத்தில் 30.10.97 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

தாயார், மனைவி, மகன்,
சகோதர சகோதரிகள்.

19/3, பீச்லேன்,
ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம். (50809)

# உதயன்

## சமநிலை வருமா?

கொழும்பில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் வெகுஜனத் தொடர்பு அமைப்பின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றிய தபால், தொலைத் தொடர்பு, வெகுஜனத் தொடர்புத்துறை அமைச்சர் மங்கள சமரவீர வெளியிட்டுள்ள கருத்து கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

சிங்களவர்களைப் போன்று தமிழர்களும் முஸ்லிம்களும் இந்த நாட்டின் சமமான பிரஜைகளே. சிறுபான்மையினர் பெரும்பான்மையினர் என்ற கூறுகளை எமது அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத்தயாரில்லை. எண்ணிக்கையை வைத்து ஒரு சமூகத்தினரைச் சிறுபான்மையினர் என்று சொல்ல முடியாது.

அமைச்சரின் இக்கருத்து அவரது தனிப்பட்ட கருத்தாக இருந்தால் அவரைப் பாராட்டுகிறோம். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் வாதிகளில் முக்கால்வாசிப் பேர் இந்தக் கருத்துக்களை ஆதரிப்பவர்களாக இருந்தால் அது பெரிய விடயமாகக் கருதப்பட வேண்டியதாகும்.

எண்ணிக்கையில் கூடுதலாக இருப்போர் பெரும்பான்மையினர்; குறைவானோர் சிறுபான்மையினர். அதனால் பெரும்பான்மை மக்கள் கூடுதல் உரிமைகளுக்கும், சலுகைகளுக்கும் உரித்துடையவர்கள் என்ற தவறான கருத்தையே சிங்கள மக்களிடம் தென்னிலங்கை அரசியல் வாதிகள் விதைத்தனர்.

ஜனநாயகம் என்பது எண்ணிக்கையில் கூடுதலாக உள்ளோரிடம் ஆட்சி அதிகாரம் என்ற நிலையைப் பேணுவதால், சிங்களவரே ஆளும் இனம் தமிழர் மற்றும் முஸ்லிம்கள் ஆளப்படும் இனங்கள் என்ற அழிக்கமுடியாத எண்ணம் தெற்கில் வேரூன்றி விட்டது.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகிய எல்லா இன மக்களும் முதலாந் தரப்பிரஜைகளே இரண்டாம் தரப் பிரஜைகள் என்று எவரும் இருக்கக் கூடாது என்ற கருத்து வலுப்பெற்றிருக்குமாயின் நாடு இன்றைய அரசியல் நரக நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கமாட்டாது.

இலங்கைக்கு அந்நியரிடம் இருந்து விடுதலை கிடைத்த உடனேயே, அன்றைய தலைவர்கள் சிங்களவர்கள் ஆளும் இனம், முதலாந்தரப் பிரஜைகள், உரிமைகள், சலுகைகளில் அவர்களுக்கே முதலிடம், ஏனையோர் தங்களுக்குச் சமமானவர்களாக இருக்க முடியாது — என்ற நிலைப்பாட்டை வகுத்துக் கொண்டனர். அவற்றையே அழுங்குப் பிடியாகப் பிடித்துக் கொண்டனர். சற்றேனும் விட்டுக் கொடுக்கவும் மறுத்தனர்.

இதனால் —

தாம் இரண்டாம் தரப் பிரஜைகளாக வாழக் கூடாது என்று தமிழர்கள் விரும்பினர். தாம் ஆண்ட இனம் அதனால் தம்மைத்தாமே ஆள வேண்டும் என்று முடிவு செய்தனர். அதனால் இரு தரப்புகளுக்கும் இடையில் பிணக்குகள், பூசல்கள் தொடங்கி, பின்னர் மோதல்களாக வெடித்து இப்போது பெரும் போராகியுள்ளது.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள்எல்லோரும்எல்லா வகைகளிலும் சமமானவர்கள் என்ற நிலை சொல்லில் அல்லாமல், செயலிலும் உறுதிப்படுத்தப் பட்டாலேயே இந்த நாடு எப்போதும் ஒரே நாடாக இருக்க முடியும். இல்லையேல் அது சாத்தியமற்றதாகிவிடும்.

# மாணவரை நடுத்தெருவில் நிறுத்தும் இன்றைய கல்விமுறை தேவையா?

### மட்டக்களப்பு மாவட்ட கூட்டணி எம். பி. கேள்வி

மட்டக்களப்பு, ஒக். 29

பெரும்பான்மையான மாணவர்களை நடுத் தெருவில் நிறுத்தும் இன்றைய கல்வி முறை அவசியம் தானா?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் தேசியப் பாடசாலையில் கடந்த சனியன்று நடந்த புதிய மண்டபத் திறப்பு விழாவிலும், பரிசளிப்பு நிகழ்விலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

இந்நாட்டின் எதிர்காலம் — குறிப்பாக வடக்கு -கிழக்கின் எதிர்காலம் — மிகச் சிறந்து விளங்க வேண்டுமென்றால் அது இந்தத் தலைமுறையைச் சார்ந்த மாணவ, மாணவிகளின் கையில் தான் இருக்கிறது.

இன்றைய மாணவர்கள் பொறுப்புணர்ச்சியோடும், கட்டுப்பாட்டுணர்ச்சியோடும் நிலை நாட்டும் அறிவுத் திறனும், ஆற்றல் திறனும் தான், தியாகமனப்பான்மையோடு களத்திலே போராடிக் கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களது புதிய தமிழீழத்தை உருவாக்கித்தர வேண்டும்.

ஆனால் இதற்கெல்லாம் தடைக்கல்லாக இருப்பது இன்றைய கல்வி முறையாகும்.

நாட்டில் இன்று சுமார் 10 ஆயிரம் பாடசாலைகள் உள்ளன. மொத்த மாணவர்கள் எண்ணிக்கை 42 லட்சமாகும். அதாவது நாட்டின் மொத்த சனத்தொகையில் இது 24 சதவீதமாகும்.

1995ஆம் ஆண்டு ஜி. சீ. ஈ. (சாதாரணதரப்) பரீட்சையில்தோற்றியமாணவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்து 99 ஆயிரமாகும். இவர்களில் சுமார் 36 ஆயிரம் மாணவர்கள் அவர்கள் தோற்றிய எட்டுப் பாடங்களிலும் எடுத்த புள்ளிகள் ''சைபர்'' ஆகும். இதே போன்று பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 40.3 சத வீதமான மாணவர்கள் ஒன்று முதல் 29 புள்ளிகள் வரையுமே அவர்கள் தோற்றிய பாடங்களில் பெற்றுள்ளார்கள். 10 சத வீதமான மாணவர்கள் அவர்கள் தோற்றிய பாடங்களில் 51முதல் 70 புள்ளிகள் பெற்றனர். தோற்றிய எட்டுப்பாடங்களிலும் 71 முதல் 100 புள்ளிகள்வரை பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை ஆகமொத்தம் 685 ஆகும்.

1993ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 380 மாணவர்கள் ஜி சீ ஈ (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றினர். இவர்களில் 9 சதவீத மாணவர்கள் 4 பாடங்களிலும் சித்தியடையவில்லை. தோற்றிய மாணவர்களில் 59 ஆயிரத்து 308 பேர் அதாவது 48 சதவீதத்தினர் பல்கலைக் கழக அனுமதிக்குத் தகுதி பெற்றனர். இவர்களில் 9,037 மாணவர்கள் அதாவது 15. 2வீத மாணவர்களுக்கு மட்டுமே பல்கலைக் கழக அனுமதி வழங்கப்பட்டது எனவே 50 ஆயிரத்து 271 மாணவர்கள் பல்கலைக் கழகம் புக தகுதி பெற்றும் பல்கலைக்கழகம் செல்ல முடியாது போய்விட்டது. ஆண்டு தோறும் இதே நிலைதான்.

இந்நாட்டில் ஆண்டு தோறும் 2 லட்சத்து 70 ஆயிரம் இளைஞர்களும், யுவதிகளும் வேலை தேடும், பட்டியலில் சேர்க்கப்படுகிறார்கள். இவர்களில் ஒருலட்சத்து 20 ஆயிரம் பேருக்கு மட்டுமே வேலைவாய்ப்புக் கிடைக்கின்றது. அப்படியானால் ஆண்டு தோறும் ஒருலட்சத்து 50 ஆயிரம் பேர் வேலை இல்லாதோர் பட்டியலில் சேர்க்கப்படுகின்றனர்.

இந்த நாட்டின் வேலையற்றோர் எண்ணிக்கை மொத்த சனத்தொகையில் சுமார் 22 சத வீதமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இந்தத் துர்ப்பாக்கிய நிலைக்கு காரணம் யார்? இந்த நிலைக்குக் காரணம் இன்றைய கல்வி முறைதான்.

இன்றைய கல்வி முறை ஆசிரியர்களை மையமாகக் கொண்ட கல்வி முறையாக அமைந்துள்ளதேதவிர மாணவர்களை மையமாகக் கொண்டதாக அல்ல என்று கூறப்படுகிறது. வகுப்பறைக் கற்பித்தலில் மாணவர்களுக்கு போதிய விளக்கம் அளிக்கப் படுவதில்லை. இதனால்மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்குச்செல்கின்றார்கள் ஆனால் அங்கும் சிறந்த கற்பித்தல் இல்லை. பரீட்சைக்கு ஏற்ற வகையில் அங்கு கல்வி அளிக்கப்படுகின்றதே தவிர முறையான கல்வி வழங்கப்படுவதில்லை.

மாணவர் தொகையில் ஒவ்வொரு 17 பேரில் ஒருவரைத் தவிர ஏனைய 16 பேரையும் நடுத்தெருவில் நிறுத்தும் இன்றைய கல்வி முறை தேவை தானா? — என்றார். (ஐ-3)

## பிரிவுபசாரமும் வரவேற்பு விழாவும்

நல்லூர்ப்பிரதேச செயலக முன்னாள் பிரதேச செயலர் திருமதி கமலா சிவசிதம்பரத்துக்கு பிரிவுபசார வைபவமும், புதிய பிரதேச செயலாளராகப் பதவியேற்றுள்ள த. கனகரத்தினத்திற்கு வரவேற்பு வைபவமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர்ப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றன.

மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் பலர் உரையாற்றினர்.

திருநெல்வேலி கிராம சேவையாளரும், நல்லூர்ப்பிரதேச செயலக நலன்புரிச் சங்கச் செயலாளருமான க.சிவராசா நன்றி கூறினார்.

## சாயி சிந்தனை

ஒரு செயலைக் குறித்து அது தர்மமா, இல்லையா என்பதை எப்படித் தீர்மானிப்பது? இத்தகைய வேளைகளில் உபயோகமாகக் கூடிய சில முறைகளைக் கூறுகின்றேன்.

உங்களுக்கும், மற்றவர்களுக்கும் எந்தச் செயல் துன்பத்தைத் தரவில்லையோ அது சரியான, தர்மமான செயலாகும். ஆகவே உங்களுக்கு மகிழ்ச்சி தரும் வகையிலும் மற்றவர்களுக்கு மகிழ்ச்சி தரும் வகையிலும் காரியங்களைச் செய்யுங்கள்.

செயலில் தர்மத்தை அறிவதற்கு இன்னொரு முறையும் உண்டு. மனம், வாக்கு, காயம் மூன்றுக்கும் இசைவை ஏற்படுத்துதல். அதாவது பேசுவதுபோல் நடந்து, உணர்வதைப் பேசி, மனச்சாட்சிக்குப் பொய்யாது ஒழுகுதல். உங்கள் எண்ணங்களைப் பொய் என்ற திரையிட்டு மறைக்க வேண்டாம் மனச்சாட்சியைப் பலவந்தமாக அடக்கி ஒடுக்கிக் கொண்டு அது ஒப்புதல் தராத காரியங்களில் இறங்க வேண்டாம். இதுவேதார்மீகவாழ்க்கை.

சரியானவற்றை அடிக்கடி செய்துவந்தால் போகப் போக அது எளிதாகிவிடும். அந்தப்பழக்கம் மனச்சாட்சியை வளர்க்கும். சரியாக நடந்து கொள்ளப் பழகிவிட்டீர்களானால், பின் அது தன்வியல்பாகிவிடும். நீங்கள் எப்படியானவர்என்பதைப் பொறுத்தே உங்கள் செயல்கள் அமையும். செயல்களைப் பார்த்தும் நீங்கள் எப்படியானவர் என்பதை அறியலாம் இரண்டும் பெரும்பாலும் ஒன்றை ஒன்று சார்ந்தவையே.

சுருங்கச் சொன்னால் புலனின்ப வாழ்க்கை அதர்மம்; ஆத்மீக வாழ்க்கை தர்மம்.

Sathya Sai speaks vol:ii

# யாழ். நகரில் வெள்ளியன்று சமாதானம் வேண்டிப் பேரணி!

யாழ்ப்பாணம், ஒக். 29

நாட்டில் நீண்ட சமாதானமும், சுகவாழ்வும் வேண்டி செபமாலைத் தியானப் பேரணி ஒன்று எதிர் வரும் வெள்ளியன்று யாழ். நகரில் இடம்பெறவுள்ளது.

யாழ். மறை மாவட்டநீதி, சமாதானத்திற்கான குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பேரணி யாழ். நகரிலுள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் இருந்து ஆரம்பமாகிப் பிற்பகல் 4.30 மணியளவில் யாழ். மரியன்னை பேராலயத்தைச் சென்றடையும். அங்கு யாழ். ஆயர் அதிவந். தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் சமாதானத்திற்கான பொது வழிபாடு இடம் பெறும். அதனைத் தொடர்ந்து ''அமைதி வேள்வி'' என்னும் நாடகமும் மேடையேற்றப்படும்.

இப்பேரணியில் கலந்து கொண்டு இந்த மண்ணில் நீண்ட சமாதானம் நிலவ வழிபாடு நிகழ்த்தும் வண்ணம் அனைவருக்கும் இப்பேரணிக்கான ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஐ-ரீ)

### கூட்டுறவு ஊழியர் சம்பளம்:

# புதிய சுற்றறிக்கையை உடன் இங்கு அனுப்பக் கோரிக்கை

அரியாலை, ஒக். 29

கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் ஊழியர்களின் பதவி நிலைகள், தகைமைகள் சம்பளம் போன்ற விவரங்கள் அடங்கிய புதிய சுற்றறிக்கையை உடனடியாக இங்கு அனுப்பிவைக்குமாறு யாழ். ப. நோ. கூ. சங்கத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவிற்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்தப் புதிய சுற்றறிக்கை வடக்கு கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவிற்கு அனுப்பிவைக்கப் பட்டிருப்பதாக கொழும்பு கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் செயலாளர் இங்கு தகவல் அனுப்பியதை அடுத்தே இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

அண்மையில் கொழும்பு சென்றிருந்த யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் சீ. வி .கே. சிவஞானம் பலநோக்கு கூட்டுறவு சங்க ஊழியர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் சம்பளம் போதாது என்றும் அதனை அதிகரிக்க வேண்டும் என்றும் அதுதொடர்பாக புதிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் எனவும் கோரியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது (ஐ-17)

## நாளை

**ஐப்பசி 13**

வியாழக்கிழமை

திதி: சதுர்த்தசி

பிற்பகல் 2.11 வரை.

நட்சத்திரம்: சித்திரை

பின்இரவு 1.34 வரை.

தீபாவளித் திருநாள்

சுபநேரம்: 7.33-9.03

[illegible]

# யாழ். பொலிஸ் நிலையங்களில் தமிழ் பொலிஸாரை நியமிக்குக!

யாழ். மாவட்ட நீதிமன்றங்களில் தமிழ் மொழி மூலம் வழக்குகள் நடைபெற வசதியாக சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் தெரிந்த பொலிஸாரை நியமிக்க வேண்டும்.

வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபைத் தலைவர் சோமபால குணதீர பொலிஸ்மா அதிபர் டபிள்யூ. ராஜகுருவிடம் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

இதுவிடயமாக குணதீர ராஜகுருவுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அண்மையில் நான் யாழ்ப்பாணம் சென்றிருந்த சமயம் யாழ். நீதிமன்றத்துக்கு சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் ஆராய்ந்தேன். அங்கு போதிய ஆளணியினர் இல்லை. இதை நிவர்த்தி செய்ய எமது சபையின் நிதி உதவியுடன் எழுதுவினைஞர், மொழி பெயர்ப்பாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளேன்.

அங்கு வழக்குத்தாக்கல் செய்யும் ''பி'' அறிக்கைகள் மற்றும் முறைப்பாட்டுப்பிரதிகள் யாவும் சிங்கள மொழியில் பொலிஸாரால்சமர்ப்பிக்கப்படுவதால் வழக்குகளை முறைப்படி நடத்த முடியாதுள்ளதாக சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

ஆகவேஉடனடியாக யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் தமிழ் தெரிந்த பொலிஸாரை நியமிக்க வேண்டும்— என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆயிரம் அதிபர்கள், ஆசிரியர்கள் இன்றுசுகவீனவிடுமுறைபோராட்டம்

## கல்முனையில் 208 பாடசாலைகள் செயல் இழக்கும்

அம்பாறை, ஒக். 29

இடர்காலக் கொடுப்பனவு வழங்கக் கோரி கல்முனை கல்வி வலயத்தைச் சேர்ந்த 3 ஆயிரம் அதிபர்கள், ஆசிரியர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டம் ஒன்றை இன்று ஆரம்பிக்க உள்ளனர்.

இன்று காலை பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைக்கு சென்று பதிவேட்டில் சுகவீன விடுமுறையில் செல்வதற்கான குறிப்பைப் பதிவு செய்துவிட்டு பாடசாலையை விட்டு வெளியேறி விடுவார்கள்.

இந்தப் போராட்டத்தால் 208 பாடசாலைகள் செயல் இழக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இடர்கால கொடுப்பனவை வழங்காதுவிட்டால் பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் 3 ஆண்டு திட்டத்தை கைவிடவும் —

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறும் ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சையை பகிஷ்கரிக்கவும் — இவர்களால் முடிவு செய்யப்பட்டுள்ளது. (இ-14)

## வரப்பிரகாஷ் குடும்பத்துக்கு அமைச்சர் அனுதாபச் செய்தி

கொழும்பு, ஒக். 29

கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன, 'ராகிங்' காரணமாக மரணமான பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன் வரப்பிரகாஷின் பெற்றோருக்கு அனுதாபச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பல்கலைக்கழகங்களுக்கும் ஏனைய கல்வி நிறுவனங்களுக்கும் அனுமதிக்கப்படும் புதிய மாணவர்களைப் பகிடிவதைக்குள்ளாக்குவது சட்டவிரோதமான செயலாகும்.

உயர் கல்விபெறும் நோக்கத்துடன் பல்கலைக்கழகம் செல்லும் எமது மாணவர்கள் இத்தகைய துஷ்பிரயோகங்களுக்குட்படுவது மிகவும் துரதிர்ஷ்டவசமானதாகும்.

சம்பந்தப்பட்டவர்கள் எந்தக் கல்வி நிறுவனத்தைச் சேர்ந்தவர்களானாலும் சரி அவர்களுக்கு உரிய தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்படி அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## தலைமறை...

(முதலாம் பக்கத் தொடர்)

சதீஸ்கரனைத் தேடிக் கண்டுபிடித்து இன்று அல்லது நாளை பொலீஸில் ஒப்படைப்பதாக அவரின் பெற்றோர் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

வரப்பிரகாஷ் 'ராக்கிங்' செய்யப்பட்ட சம்பவத்தின் சூத்திரதாரி சதீஸ்கரன் என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர். (இ-21)

ராசியின் 10 ஆம் ஆண்டின்
10 % மலிவு விற்பனை
(சகலவிதமான புடைவைத் தினுசுகளும்)
ஒருமுறை விஜயம் செய்யுங்கள். உண்மையை நீங்கள் அறிவீர்கள்.
ராசி சில்க்ஸ்
70,71, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
இன்றைய அறிமுகம்! நாளைய நாகரிகர்!
நல்லின ஆடைகளை நயமுடனே வழங்கிட
நகரமதில் தோன்றிவிட்டாள்
நல்லி சில்க்ஸ்
வெளிநாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட
நல்லின ஆடைகளைத் தெரிவுசெய்ய
நல்லி சில்க்ஸ்
121/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி/1891)



யாழ். நகரில்
குலம் கிறீம் கவுஸ்
மங்களகரமான
திறப்பு விழா
காலம்: 29-10-97 புதன்கிழமை
காலை 6-30 மணி
இடம்: 226, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
உயர்திரு. து. வைத்திலிங்கம்
(மேலதிக அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.)
அவர்கள் திறந்து வைப்பார்கள்
எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
ஐ. குலசிங்கம்
உரிமையாளர்
குலம் கிறீம் கவுஸ்
(50780)



# கட்டுடை கிரனேட் சம்பவம் சந்தேக நபருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஒக். 29

கட்டுடையில் கிரனேட் வெடித்து இருவர் கொல்லப்பட்ட சம்பவம்தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள கதிரவேலு நித்தியானந்தராசா என்பவரை எதிர் வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் ஏ. என். எஸ். இராமச்சந்திரன் உத்தரவிட்டார்

கட்டுடையில் வீடு ஒன்றில் கடந்த 9 ஆம் திகதி கிரனேட் ஒன்று வெடித்த சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டிருந்தனர்.

இச்சம்பவம் குறித்து கைது செய்யப்பட்டுள்ள கதிரவேலு நித்தியானந்தராசா மீது கொலைக் குற்றம் சாட்டி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் எதிரிசார்பில் சட்டத்தரணி கே. இராதாகிருஷ்ணனின் அனுசரணையுடன் ஆஜரான சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம்,

சந்தேகநபர் காதலில் தோல்வி கண்டு மனம்உடைந்திருந்தார்.

வீடு துப்புரவு செய்யும் போது கண்டெடுத்த கிரனேட் ஒன்றை வெடிக்க வைத்து தற்கொலை செய்ய முயற்சித்தார். அச்சமயம் வீட்டடில் இருந்தவர்கள் அந்த கிரனேட்டைத் தட்டிவிட்டனர். அதனால் அங்கிருந்த இருவர் உயிரிழந்தனர்.

அவர்களைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருக்கவில்லை.

ஆகவே அவர்மீதுகொலைக் குற்றச்சாட்டு சுமத்த முடியாது. தற்கொலை முயற்சி குற்றச்சாட்டே சுமத்தமுடியும்- என்று தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து அவரை அடுத்த மாதம் 6ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (இ-3

## மருதமுனை..

(முதலாம் பக்கத் தொடர்)

மருதமுனை பொலீஸ் காவல் நிலையத்துக்கு மின் விநியோகம் செய்யும் இந்த மின்மாற்றி இதுவரை 3 தடவைகள் தகர்க்கப்பட்டுள்ளன. (இ 21)

## கோப்ரலை சுட்டசிப்பாய்

மதவாச்சி சி. ஐ. படைப் பிரிவைச் சேர்ந்த இராணுவக் கோப்ரல் ஒருவரை சக சிப்பாய் சுட்டுக்கொலை செய்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சிப்பாய் காதலித்த பெண்ணை இராணுவ கோப்ரலும் விரும்பியதால் ஏற்பட்ட தகராறு கொலையில் முடிந்ததாகக் கூறப்பட்டது.

அந்த சிப்பாய் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-3)

## பிரான்ஸிலும்...

(முதலாம் பக்கத் தொடர்)

மூலம் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு புலிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

''இப்படி பிரான்ஸிலும் பிரிட்டனிலும் தம்மைச் சந்தித்த விடுதலைப் புலிகள் பிரமுகர்களிடம் கூறியதாக அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் பிரமுகர்கள்தமதுவேண்டுதலைமிக அவதானமாகக் கேட்டனர் என்றும் வாசுதேவ தெரிவித்தார்.'' (இ-21-3)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்)

களுக்குத் தகவல் கொடுப்பவர் எனப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

தற்போது அவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். (இ-21)

## குழப்பம்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஐ. தே. கவின் செயற்குழு நேற்று முன்தினம் கூடிய போது அரசின் யோசனைகள் பற்றி நீண்ட நேரம் ஆராயப்பட்டது.

கிழக்கு மாகாணத்தை மூன்றாகப் பிரிப்பது, அங்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது ஆகிய அரசின் யோசனையை எதிர்ப்பது என்றும் —

அரசின் யோசனையில் உள்ள அலகு தொடர்பான யோசனை தவிர்ந்த ஏனைய யோசனைகளை திருத்தத்துடன் ஆதரிப்பது என்றும் — செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருப்பதாக ஐ. தே. க. வட்டாரங்களில் இருந்து தெரியவந்திருப்பதாக கொழும்பு செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (இ-3)

## வரப்பிரகாஷ்...

(முதலாம் பக்கத் தொடர்)

வொரு கல்வி நிறுவனத்திலும் ''ராகிங்''கை அனுமதிக்க முடியாது.

எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் — என்று அமைச்சர் தெரிவித்தார்.

இதற்கிடையில் வரப்பிரகாஷின் பூதவுடல் நேற்று மரண விசாரணையின்பின்னர் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது.

கொழும்பு நகர மரண விசாரணை அதிகாரி டபிள்யூ எம். எம். ஜி. பெரேரா முன்னிலையில் மரணவிசாரணை நடைபெற்றது.

மரணவிசாரணையின் போது தகப்பன் டாக்டர் செல்வவிநாயகபிரகாசம் தமது மனைவி, மகன் தேவபிரகாஷ் ஆகியோர் சகிதம் சமுகமளித்திருந்தார்.

பிரேத பரிசோதனைகளை மேலதிக சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எம். டி. சில்வா மேற்கொண்டார்:

அவரது அறிக்கையில் ''சரீரத்தில் ஏற்பட்ட அழுத்தம் காரணமாக சிறுநீரகம் முற்றாக செயலிழந்து விட்டது. இதனால் தான் இம் மரணம் ஏற்பட்டது'' என தெரிவிக்கப்பட்டுளளது.

பூதவுடலை பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட மரணவிசாரணை அதிகாரி 4. 11. 97 வரை விசாரணையை ஒத்திவைத்தார்.

இச்சம்பவம் குறித்து இறந்தவரின் சகோதரர் எஸ். தேவபிரகாஷ் செய்தியாளரிடம் கருத்து தெரிவிக்கையில்.

''ஒரு வார காலம் இவரது உடல் நிலையில் முன்னேற்றம் காணப்பட்டது. இரு தடவைகள் சுவாசப்பை பாதிப்பு ஏற்பட்டது. 3 ஆம் தடவை ஏற்பட்ட போது அவர் இறந்து விட்டார்'' என்றார்.

வரப்பிரகாஷின் பூதவுடல் இன்று பம்பலப்பிட்டி ரயில் நிலைய இல்லத்திலிருந்து கனத்தை மயானத்துக்கு எடுத்து செல்லப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

இறுதிக்கிரியைகளில் பல்கலைக் கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் சகிதம் 1500 மாணவர்கள் கலந்து கொள்ள விருக்கிறார்கள் என மாணவர் அமைப்புக்கள் அறிவித்துள்ளன. (இ-21)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29 - 10 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org